# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைக்குரிய மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 8 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..................................................................................

**பகுதி - I**

❖ **சரியான விடையினைத் தெரிவு செய்க.**

01. மரத்தில் கனிகள் தொங்கின. இங்கு "கனி" என்பதன் ஒத்தகருத்துச் சொல்
    1) பலம் 2) பளம் 3) காய் 4) பழம்

02. பவளம் நாணம் அடைந்தாள். இங்கு "நாணம்" என்பதன் ஒத்தகருத்துச் சொல்
    1) பயம் 2) ஆவல் 3) வெட்கம் 4) விருப்பு

03. பறவைகள் உச்சி வானில் பறந்தன. இதில் "வானம்" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
    1) ஆகாயம் 2) விண் 3) பூமி 4) பிரபஞ்சம்

04. "கொழுந்துவிட்டு நிமிர்கின்ற கோபந்தான்"
    இங்கு கோபம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
    1) மூர்க்கம் 2) சாந்தம் 3) அமைதி 4) வீரம்

05. அரசர் கோமான் அரியணையில் வீற்றிருந்தார்.
    இதில் "கோமான்" என்பதன் எதிர்ப்பாற்சொல்
    1) கோமாளி 2) கோமதி 3) கோமகள் 4) கோமாட்டி

06. பின்வருவனவற்றுள் காரண இடுகுறிப் பெயராக அமைவது
    1) மலை 2) வானொலி 3) வளையம் 4) பறவை

07. ரெலெஸ்கோப் (Telescope) மூலம் விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். இங்கு ரெலெஸ்கோப் என்பதன் கலைச்சொல்
    1) ஒலிவாங்கி 2) தொலைநோக்கி 3) தானியங்கி 4) நுணுக்குக்காட்டி

08. அரி, கேசரி, சீயம், அளி என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
    1) யானை 2) சிங்கம் 3) மான் 4) காளை

09. கல்லின் கூட்டம் குவியல் போலத் திறப்புக்களின் கூட்டம்
    1) திரட்சி 2) கோவை 3) கற்றை 4) கோர்வை

10. முயற்சி திருவினையாக்கும் என்ற கருத்தைத் தரும் பழமொழி
    1) ஆறின கஞ்சி பழங்கஞ்சி 2) ஆனைக்கும் அடி சறுக்கும்
    3) அழுத பிள்ளை பால் குடிக்கும் 4) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

11. கூண்டில் கிளி என்ற கவிதையின் ஆசிரியர்
    1) கு. அழகிரிசாமி 2) க.வேந்தனார் 3) அ.ச.ஞானசம்பந்தன் 4) க.சச்சிதானந்தன்

12. உயிர்மெய் நெட்டெழுத்துக்களின் எண்ணிக்கை
    1) 126 2) 247 3) 90 4) 216

13. தேனைப் போன்ற மாங்கனிகளைப் பச்சைக்கிளி உண்டது. இங்கு வந்துள்ள அணி
    1) உவமை அணி 2) உருவக அணி 3) உயர்வு நவிற்சி அணி 4) தற்குறிப்பேற்ற அணி

14. மாலதியின் தலையில் மரக்கிளை முறிந்து விழுந்தது.
இங்கு தலை, கிளை என்பன
1) பொருட்பெயர் 2) இடப்பெயர் 3) சினைப்பெயர் 4) தொழிற்பெயர்

15. நான்காம் வேற்றுமையின் உருபு
1) ஐ 2) கு 3) ஆல் 4) அது

16. பின்வருவனவற்றுள் நிகழ்கால இடைநிலைகள்
1) ப. வ் 2) த், ட் 3) கிறு, கின்று 4) ந், ன்

17. வெள்ளைப் பூனை பாலைக் குடித்தது. இதில் வந்துள்ள அடைமொழி
1) பூனை 2) பாலை 3) வெள்ளை 4) குடித்தது

18. ஜனாதிபதிக்கு மாணவிகள் பூங்கொத்து கொடுத்து....
1) வரவேற்றனர் 2) வரவோற்றனர் 3) வரவேர்ற்றனர் 4) வரவேற்றினர்

19. அறுபதாவது ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படும் விழா
1) மணி விழா 2) பொன்விழா 3) காகித விழா 4) பவள விழா

20. வாக்கியங்களைச் சரியான முறையில் ஒழுங்கமைக்குக.
அ) நாவல் பல சம்பவங்களை உள்ளடக்கி உள்ளது
ஆ) சிறுகதை, நாவல் என்பன புனைகதை இலக்கியங்கள் ஆகும்
இ) சிறுகதை அளவில் சிறியதாக உள்ளது
ஈ) ஆயினும் நாவலைவிட சிறுகதைகளை வாசகர் விரும்பி வாசிக்கின்றனர்
உ) இருப்பினும் இவை இரண்டும் அடிப்படையில் வேறுபடுகின்றன

(20 x 1½ = 30 புள்ளிகள்)

## பகுதி - II

**01. பின்வரும் தலைப்புக்களுள் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுரை எழுதுக.**

1. வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்.
2. காலை நேரக் கடற்கரைக் காட்சி
3. நூல் நிலையத்தின் சுயசரிதை
4. நாட்டார் பாடல்கள் (18 புள்ளிகள்)

**02.** சுகவீனமுற்றிருக்கும் உமது நண்பனுக்கு ஆறுதல் கூறியும், அவர் நலமுற வேண்டியும் 75 சொற்களில் கடிதம் எழுதுக. (12 புள்ளிகள்)

**03. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. வியாபாரி தனது சொத்துக்களை எவ்வெவற்றின் மூலம் சம்பாதித்தார்?
2. வியாபாரி தன் மகன் மீது ஏன் கோபமடைந்தார்?
3. கூண்டிற்கிளி எனும் பாடப்பகுதியில் “பாவி எனக்கு விதியில்லை” என்று கிளி ஏன் கூறியது?
4. கிளிக்கு என்னென்ன செயல்களைப் பவளம் செய்தாள்?
5. கம்பன் காப்பியத்தில் அதிக பாடல்களில் பாடப்பட்டவர் யார்? ஒரு பாடலில் பாடப்பட்டவர் யார்?
6. விமானத்தின் முன்னறைக்கும் பறவைகளின் தலைக்கும் எவ்வாறு எழுத்தாளர் ஒற்றுமை காட்டுகிறார்?
7. இராபர்ட்புரூஸ் சிலந்திப்பூச்சியிடம் பெற்றுக்கொண்ட படிப்பினை யாது?
8. நாம் ஏன் புத்தகங்களை வாசிக்க வேண்டும்?
9. பேராசிரியர் ம.மு.உவைஸ் அவர்களின் பணிகள் இரண்டினைத் தருக.
10. பேராசிரியர் ம.மு.உவைஸ் அவர்களின் ஆசிரியர்கள் யாவர்?

(10 x 2 = 20 புள்ளிகள்)

**04. கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

புங்குடுதீவின் கிழக்கூரிலே ஒரு வேப்பமரம் நின்றது. பத்துப்பேர் சேர்ந்தும் அம்மரத்தின் அடியைக்கூட கட்டிப்பிடிக்க முடியாது. அவ்வளவு பருமனுடையது அது. அதன் கிளைகள் நாற்றிசையும் நீண்டு பரந்து வளர்ந்திருந்தன. ஒவ்வொரு கிளையிலும் பசிய இலைகள் நிறைந்திருந்தன. மெல்லிய காற்று வீசும் போது அவ் இலைகள் கலகல எனச் சிரித்து ஒலி எழுப்பின. அவ் ஒலி மக்களை மரநிழலில் இளைப்பாற வரும்படி அழைப்பதுபோல இருந்தது. அந்த மரத்தின் நிழல் கடுங்கோடையிலும் "குளுகுளு" எனக் குளிர்ச்சியாக இருந்தது. அந்த நிழலில் ஆயிரக்கணக்கான மக்கள் வசதியாக இருந்து இளைப்பாற முடியும்.

அ. வேப்பமரம் நின்ற இடம் எது?
ஆ. வேப்பமரத்தின் பருமன் எப்படிப்பட்டது?
இ. இம் மரத்தின் கிளைகள் எவ்வகைப்பட்டன?
ஈ. காற்று வீசும்போது மரத்தின் இலைகள் எவ்விதம் ஒலி எழுப்பின?
உ. ஒத்தகருத்துச் சொல் தருக.
1. மரம்
2. காற்று (10 புள்ளிகள்)

**05. கீழ்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

பாலைப்போல நிலவு வானில்
பவனி வரப் போகுது
கோலக்கடல் அலை கைதட்டிக்
குதூகலிக்கப் போகுது
நீல வானும் கண் சிமிட்டி
நின்று பார்க்கப் போகுது

மாலை வேளை மலர்ந்து கங்குல்
மங்கை தோன்றப் போகுறது.

அ. நிலவு எதைப்போல எவ்வாறு வரப்போகிறது எனக் கூறப்பட்டுள்ளது?
ஆ. நிலவைக் கண்டு கடல் அலை எவ்விதம் மகிழ்ச்சி கொள்கிறது?
இ. நீல வானம் எதனை நின்று பார்க்கப் போகிறது?
ஈ. இப் பாடல் எந்நிகழ்வைப் பற்றிக் கூறுகிறது?
உ. ஒத்தகருத்துச் சொல் தருக.
1. கங்குல்
2. மங்கை (10 புள்ளிகள்)

**06. பின்வரும் சொற்களை வைத்து கருத்துள்ள வாக்கியம் அமைக்குக.**

1. உலை
2. உளை
3. முருகு
4. முறுகு
5. பரி
6. பறி
7. தினை
8. திணை
9. தனி
10. தணி (10 புள்ளிகள்)